2012 ஏப்ரல் 20]

மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 50,000 பேர் சேரக்கூடிய இடம் என்று சொல்கிறார். அப்படி இருக்குமேயானால், நிச்சயமாக ஆய்வு செய்து, அங்கே இடம் இருக்கின்ற பட்சத்தில், அதற்கேற்றவாறு அங்கே வணிக வளாகம் கட்டித் தருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 133, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

133—

தார்ச் சாலை

***754—திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி மாவட்டம் கண்ணகி கோயிலுக்குச் செல்வதற்கு வனப் பகுதியில் தார்ச் சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

தேனி மாவட்டம், கண்ணகி கோயிலுக்குச் செல்லக்கூடிய அனுமதிக்கப்பட்ட பாதை அடர்ந்த வனப் பகுதிக்குள் சரிவான நிலப்பரப்பில் அமைந்துள்ளதாலும், இப்பகுதியில் அதிகமான வன உயிரின நடமாட்டம் உள்ள காரணத்தாலும், இப்பாதை ஆண்டு முழுவதும் பொதுமக்களால் பயன்படுத்தப்படுவதில்லை என்பதாலும், மேலும், இப்பாதையில் சித்ரா பௌர்ணமி அன்று மட்டும்தான் சுமார் 2000 முதல் 2500 பக்தர்கள் சென்று வருகிறார்கள் என்பதாலும், தமிழக வனப் பகுதியில் சாலை அமைக்கும் அவசியம் எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.*

[2012 ஏப்ரல் 20

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐம்பெரும் காப்பியங்களில் முதன்மைக் காப்பியமான சிலப்பதிகாரத்தில் உருவாக்கப்பட்ட கதாபாத்திரத்தில் உருவான கண்ணகி, கோவலன் கதையில், பாண்டிய மன்னனுடைய தவறான தீர்ப்பினால் கோவலன் இறக்கக்கூடிய ஒரு சூழ்நிலையில் கண்ணகி மதுரையில் நியாயம் கேட்டு. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிலப்பதிகாரத்தைப்பற்றி நான் உங்களுக்கு class எடுக்கிறேன், வாருங்கள்.

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது ஒரு முக்கியமான நீண்டநாள் கோரிக்கை. கண்ணகி மதுரை வந்து நியாயம் கேட்டு, நீதி கேட்டு, தவறான தீர்ப்பினால் ஒரு உயிரை இழந்ததற்காக மன்னன் இறந்து, அந்த மதுரையை எரித்துவிட்டு, வைகை ஆற்றில் நடந்து மலையில் ஏறி கண்ணகி தவம் இருந்ததாக வரலாறு கூறுகிறது. பல நூறு வருடங்களாக மக்கள் அங்கு வழிபடச் சென்று வருகிறார்கள். இதில் ஒரு சிறப்பு அம்சம் என்னவென்றால்,. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்விக்கு வாருங்கள்.

திரு. தங்க. தமிழ்ச்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1934 Government Gazettee-இல் under Section 18 of the Madras Forest Act, the Chief Conservator of Forests admits in favour of the villagers of Gudalur, the right

(1) to worship at the Mangal Devi Temple என்றுள்ளது; வழிபட்டுக்கொள்ளலாம்.

(2) மேலும் "to use and maintain the path leading to the temple to a width of 12 feet which path is described below within Vannathiparai village" என்றுள்ளது.

இந்த Gazette 1983 இல் இதே Fort St. George கோட்டையிலிருந்துதான் வெளியாகியிருக்கிறது. இதுவரைக்கும் வனத் துறையில் என்ன பிரச்சினை என்று சொன்னால், வனத் துறையில் தார்ச் சாலை போடவேண்டுமென்று சொன்னால், தில்லியில் கோர்ட்டில் இருக்கிறது, வனத் துறை அனுமதிக்காது என்று சொல்வார்கள். Gazette இல் அதற்கு 12 அடி பாதை clear ஆக இருக்கின்றது. ஒரு இலட்சம் மக்கள் வழிபட்டுக்

2012 ஏப்ரல் 20]

கொண்டிருக்கின்றார்கள். அந்தக் கோயிலின் தற்போதைய நிலைமை என்னவென்றால், அந்தக் கோயிலை கேரள அரசு தனக்குச் சொந்தமான கோயில் என்று சொல்லி, தமிழக மக்கள் வழிபடுவதற்கு அனுமதி கொடுப்பதில்லை; வஞ்சிக்கப்படுகிறார்கள். எப்படி முல்லைப் பெரியாறை திசை திருப்பி, ஒரு தவறான தகவலைக் கொடுக்கின்றார்களோ, அதைப்போல கண்ணகி கோயில் இருக்கின்ற நிலமும் தனது நிலம் என்று இப்போது சொல்லிவருகிற இந்த நேரத்தில், தமிழக அரசு, தாய் உள்ளம் கொண்ட மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, அந்த கண்ணகி கோயிலுக்கு இயற்கையாக இருக்கின்ற அந்த வழிப் பாதையில் ஒரு தார்ச் சாலை அமைத்து மக்கள் வழிபட ஏற்பாடு செய்துகொடுக்குமாறு தங்கள்வாயிலாகக் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், மேலக்கூடலூர் கிராமத்திற்கு உட்பட்ட வண்ணாத்திப்பாறை காப்புக்காடு நிலப் பகுதியில் அருள்மிகு கண்ணகி கோயில் அமைந்துள்ளது.

முற்பகல் 10-40

கண்ணகி கோயிலுக்குச் செல்லக்கூடிய பாதை அமைந்துள்ள பகுதி அடர்ந்த வனப் பகுதியாகவும், வன உயிரினங்கள் அதிகமாக வாழக்கூடிய பகுதியாகவும் உள்ளது. அனுமதிக்கப்பட்ட பாதை அமைந்துள்ள பகுதி, இயற்கையாகவே மிகவும் சரிவாக அமைந்துள்ளது. மேலும், இப்பாதை அமைந்துள்ள பகுதி அரசாணை எண் 63, சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை (வனம் 5) நாள் 26-6-2009 இல் மேகமலை வன உயிரின சரணாலயமாக அறிவிக்கப்பட்டுள்ளதால், தார்ச் சாலை அமைக்க வேண்டுமெனில், உச்ச நீதிமன்றத்தில் வழக்கு எண் 202/1995 இல் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பின்படி, தேசிய வன உயிரின வாரியம் மற்றும் உச்ச நீதிமன்றத்தினுடைய முன்னனுமதி பெற வேண்டியுள்ளது. வருடத்தில் சித்ரா பௌர்ணமியன்று மட்டும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் அனுமதிக்கப்பட்ட பாதை வழியாக கண்ணகி கோயிலுக்குச் சென்று வருகின்றார்கள். வன உயிரினங்கள் நிறைந்த

[2012 ஏப்ரல் 20

பகுதியாக உள்ளதால், அங்குள்ள சாலையைத் தார்ச் சாலையாக மாற்றுவதினால் வனப் பாதுகாப்பிற்கும், வன உயிரினப் பாதுகாப்பிற்கும் இடையூறாக இருக்க வாய்ப்பு உள்ளது. இருந்தாலும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய கோரிக்கையை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச்சென்று, ஆய்வு செய்து, தேசிய வன உயிரின வாரியம் மற்றும் உச்ச நீதிமன்றத்தினுடைய அனுமதியோடு தார்ச் சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 134, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம், மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

134—

பால் குளிரூட்டும் நிலையம்

***5639—திரு. வி. சோமசுந்தரம்:**

மாண்புமிகு பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் தொகுதி, பாலுசெட்டிசத்திரத்தில் உள்ள பால் குளிரூட்டும் நிலையத்தைத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. வி. மூர்த்தி, பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன். காஞ்சிபுரம் மாவட்டம், பாலுசெட்டிசத்திரத்தில் செயல்பட்டுவரும் பால் குளிரூட்டும் நிலையம் நாளொன்றுக்கு 30,000 லிட்டர் கொள்ளளவுள்ள பாலைக் குளிரூட்டும் திறன் கொண்டது.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, பாலுசெட்டிசத்திரம் பால் குளிரூட்டும் நிலையத்தினைத் தரம் உயர்த்தி, இதனை ஒரு சிறிய